E.G. Taylor



பாமாலை 433 அறையப்பட்ட இயேசு

1 அறையப்பட்ட இயேசு உன் மீட்பர்
பாராய்!

ஜீவன் இச்சணமே அளிப்பார்;

ஓ! பார், பாவி, பார், நீ மீட்கப்படுவாய்!

சிலுவை அறையுண்டவரால்

Refrain

பார், பார், ஜீவிப்பாய்,

சிலுவையில் மீட்பரைப்

பார்த்து பெற்றிடுவாய்

உனக்கே ஜீவன், இச்சணமே

2 அங்கேன் தொங்கினார், பாவஞ்
சுமந்தோராய்?

மானிடர் குற்றந் தீர்க்கத்தானே !

பக்கத்தில் ரத்தம் பாய்ந்து வடிந்ததாறாய்,

பாவம் தீர்ந்தது சாவால் தானே!

3 செய்ய வேண்டியதெல்லாம் இதோ
முடித்தார்;

சந்தேகம் இனி அடைவதேன்?

முடிவாம் காலத்தில் ஓர் முறை வருவார்

ஆரம்பித்ததைப் பூர்த்தி செய்வார்.